## மெதிரிகிரிய பிரதேச சபை
## பொலன்னறுவை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 208 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெதிரிகிரிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலே நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 934,624 மற்றும் திசெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்ற அபராத வருமானத்தை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் வருடத்திலே ஆகஸ்டிலிருந்து திசெம்பர் வரையான காலத்திற்குரிய அறவிடப்படவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 901,704 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இரண்டாவது சனசமூக அபிவிருத்தி மற்றும்வாழ்வாதாரங்களை மேம்படுத்துகின்ற செயற்திட்டம் பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்படுவதன்காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 2,560,241 செலுத்த வேண்டி காணப்பட்டது. இந்தப் பணம் சபையினால் தீர்க்கப்பட வேண்டிய பணமா மற்றும் சபைக்கு அமைச்சினால் அறவிடப்பட வேண்டியுள்ள பணமா என்று நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் கையிலுள்ள தொகையாக காண்பிக்கப்பட வேண்டிய இருந்த எரிபொருள் மற்றும் நுகர்வுப்பொருட்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ‘‘பிபிதெமு பொலன்னறுவை’’ அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு சபைக்குரிய இயந்திர உபகரணங்களின் சேவையை வழங்கியதனால் மீளாய்வாண்டின் இறுதி நாளில் அறவிடப்படவேண்டி இருந்த ரூபா 504,700 பணம் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள்அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் பிணை வைப்பு உபஏட்டின் படி பிணை வைப்பின் பெறுமதி ரூபா 127,639 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றின் படி அந்த தொகை ரூபா 81,835 ஆக இருந்ததால் ரூபா 45,804 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமதிகள் மற்றும் மூலதன மேம்பாட்டுக்கு வருமானத்தினால் பங்களிப்பு செய்கின்ற கணக்குகளின் மீதி என்பவற்றுக்கிடையில் 2017 திசெம்பர்31 ஆந் திகதியில் ரூபா 312,988 வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர்31 ஆந் திகதியில் பல்வேறு வைப்பு உபஏட்டின் படி ரூபா 548,193 பெறுமதியாக இருந்ததுடன் நிதிக்கூற்றின்படி அந்த தொகை ரூபா 619,930 ஆக இருந்ததால் ரூபா 71,737 வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) கடன்கொடுத்தோர் செலவு மீதிகள் மற்றும் அதற்கு உரிய செய்யப்பட்ட வேலை அறிக்கைக்குமிடையில் ரூபா 1,612,785 இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள் மீதிகளுக்குள் 1997 - 2013 இடையிலான காலத்திற்குள் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 155,344 நிலுவை வருமானம் 17 மீதிகள் சம்பந்தமாக மாகாண சபைகள் ஆணையாளரின் 1988 ஏப்ரலில் 20 ஆந் திகதிய 88/20 இலக்கமுடைய மாகாண சபைகள் நிறுவனங்களால் அறவிட முடியாதுள்ள பணம் சம்பந்தமான சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக 2010 ஆம் வருடம் முதல் 2015 ஆம் வருடம் வரை கையிருப்பில் வைத்திருந்த ரூபா 2,811,892 வேலைகளுக்கான வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்களை முன்வைக்காமையால் ரூபா 202,244,442 தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| | (i) | 126 (xxx) பிரிவு | | காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சார விளம்பரங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல் என்பவற்றுக்கான உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 143 பிரிவு | | சபையின்அதிகாரப் பிரதேசத்திலுள்ள காணி மற்றும் கட்டிடங்களுக்கு 04 வருடங்களிலிருந்து இடம்பெறுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உரிய மதிப்பீடொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |
| | (iii) | 147 மற்றும் 149 பிரிவு | | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திலே கூடுதலான வியாபார நிலையங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | 150(1), 152(1) மற்றும் 153(1) பிரிவு | | தொழிற்சாலை வியாபார மற்றும் தொழில்சார்ந்த மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் சம்பந்தமாக பட்டியல் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | 152(2) பிரிவு | | தொழில் சார்ந்த வல்லுனர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம் விதிகள்) | | | |
| | (i) | விதி இலக்கம் 59 இலிருந்து 63 வரை | - | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் கணக்கெடுப்பொன்றை நடாத்தி தொழிற்சாலை மற்றம் வியாபார சம்பந்தமான பட்டியலை மார்ச் 31 ஆம் திகதியளவில் தயாரித்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | விதி இலக்கம் 203, 204 மற்றும் 218 | - | சபையின் சொத்துக்கள் சம்பந்தமாக பூரணமான கணக்கெடுப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 104 ஆவது பிரமாணம் | 3,939,000 | கிராமங்களுக்கிடையிலான செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பாலமொன்று உடைந்து விழுந்தது சம்பந்தமாக சேதம் மற்றும் நட்டம் சம்பந்தமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டல் கோவை<br>------------------------------------------<br>2.11.2 வழிகாட்டல்கள் | | பெறுகைகள் குழுவிற்காக உறுப்பினர்களின் வரவுப் பதிவொன்று குழுவின் செயலாளரினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,027,436 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,152,038 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 2,622,000 | 2,945,701 | 2,040,870 | 3,112,673 | 2,389,400 | 4,546,412 | 2,040,870 | 2,761,130 |
| ii. | வாடகை | 7,551,000 | 4,406,500 | 4,127,027 | 194,249 | 9,167,000 | 2,272,338 | 4,127,027 | 208,966 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 465,000 | 152,979 | 564,070 | - | 410,000 | 564,070 | 564,070 | - |
| iv | ஏனைய வருமானம் | 38,883,500 | 32,634,907 | 22,643,712 | 20,910,542 | 45,809,000 | 36,522,303 | 22,623,796 | 42,299,184 |
| | | 49,521,500 | 40,140,087 | 29,375,679 | 24,217,464 | 57,775,400 | 43,905,123 | 29,355,763 | 45,269,280 |

**2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 49,521,500 ஆக இருந்தாலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 29,375,679 ஆகும். இது சதவீதத்தில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 59 சதவீதத்தால் கீழ் தரத்தில் காணப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய வருடத்திற்கு உரிய சேகரிக்கப்பட்ட நிலுவை வீதவரி வருமானம் ரூபா 377,319 ஆக இருந்ததுடன் இது அறவிடப்படவேண்டிய இருந்த ரூபா 2,761,130 நிலுவை வீதவரி வருமானத்தின் 13 சதவீதமாத்திரமேயாகும். அதன்படி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவுக்கு அமைய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் வருடத்திலே தொழிற்சாலை வரி ரூபா 15,000 அறவிடப்பட்ட 12 நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டிலே தொழிற்சாலை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வருவம் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மெதிரிகிரிய நகரத்தின் 20 வியாபார நிலையங்களின் தெரிவுப் பரிசோதனை 2017 ஆம் வருடத்திலே வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுதல் சம்பந்தமாக பரீட்சித்தலின் போது 15 வியாபார நிலையங்கள் அதாவது 75 சதவீதம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெதிரிகிரிய நகரத்தின் வெளிக்களத்தின் 04 வியாபார நிலையங்கள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரக்கட்டண அறவீடுகளை பரீட்சித்திலின் போது அந்த 04 வியாபார நிலையங்களிலிருந்தும் 2017 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரச்சார விளம்பரங்களுக்கான கட்டணங்கள் அறவிடுதல் முறையாக இடம்பெறாமையின் காரணமாக சபைக்கு பெருந்தொகையான விளம்பரப் பலகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் மூலம் நகரத்திற்கு வெளியே 07 கிலோமீற்றர் அளவான பிரதேசம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது தெரியவந்ததன் படி பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ரூபா 64,325 வும் மற்றும் தொலைபேசி நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 80,000வும் விளம்பரப் பலகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் வருடத்திலிருந்து முன்னால் மந்திரிகள் 04 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டி இருந்த இயந்திர உபகரணங்களின் வாடகை வருமானம் ரூபா 342,180 மீளாய்வாண்டிலே அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபைகளின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,711,013 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,683,039 தொகையும் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122 ஆம் பந்தியின் கீழ் 52 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது 42 விடயங்களுக்காக மாத்திரம் உப உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நடைமுறைப்படுத்தப்படாத குறிக்கோள்கள்**

2017 ஆம் வருடத்திலே நடைமுறைப்படுத்துவதற்காக நிர்வாகக் குழுவினால் முன்வைக்கப்பட்ட ரூபா 3,899,091 வான 03 ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தியசென்புர பழைய இறைச்சிக்கடையை கழிவறையுடன் திருத்தியமைப்பதற்காக ரூபா 12,520,292 ஏற்பாடு பிரதேச சபைகளை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2017 நவம்பர் 06 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய வேலைத்திட்டத்தை மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தியசென்புர 03 கடைகளுக்கு போதுமான வசதிகள் இல்லாததன் காரணமாக விண்ணப்பதாரிகள் முன்வந்திருக்கவில்லை.

(ஆ) 2017 மாகாண சபைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பிரிவினர்களுக்கு ரூபா 450,000 பெறுமதியான பல்வேறு உபகரணங்கள் மற்றும் நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களை வழங்குவதற்காக அற்த பிரிவினரை தெரிவு செய்த முறை, கிராம உத்தியோகத்தரின் அறிக்கை மற்றும் வழங்கப்படுகின்ற உபகரணங்கள் குறித்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டதா என்பது பற்றிய பின் விபரமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### ஊழியர் வெற்றிடங்கள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது பிரதேச சபையின் செயலாளர் பதவி, 03 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 3.4 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சபைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பிரிவினர்களுக்கு பூச்சாடிகள் தயாரிப்பதற்காக ரூபா 50,000 பெறுமதியான பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பொருட்களை உபயோகப்படுத்தி பூச்சாடிகள் தயாரிக்கும் வியாபாரமொன்று சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

### 3.5.1 உரித்து கையேற்கப்படாத சொத்துக்கள்

சபைக்கு உரிய காணி மற்றும் கட்டிடங்களாக குறிப்பிடக்கூடிய பிலிசறு திண்மக்கழிவு மத்திய நிலையம் மற்றும் அந்தக் காணி, 03 நூல் நிலையங்களும் அவை அமைந்துள்ள காணிகள், 35 பொது விளையாட்டு மைதானங்கள் அமைந்துள்ள காணிகள், 32 மயான பூமிகள் அமைந்துள்ள காணிகள், ஆயுர்வேத மற்றும் அந்தக் காணி என்பவை சபையின் பெயருக்கு உரித்து கையேற்கப்பட்டு அதன் பெறுமதி கணக்கு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டிருந்த குழாய் கிணறுகளின் எண்ணிக்கை 323 ஆக இருந்ததுடன் அவை நிர்மாணிக்கப்பட்ட தினத்திலிருந்து சுத்தப்படுத்தல் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை காரணமாக பாவனைக்கு உட்படுத்தமுடியாத குழாய் கிணறுகளின் எண்ணிக்கை 120 ஆகும்.

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறை உபயோகமான சொத்துக்கள்

சபைக்குரிய 04 உருப்படிகளான ரூபா 2,214,000 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 02 உருப்படிகள் 02 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திலிருந்து விளைவற்று அல்லது குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

பிரதேச சபையினால் 2017 ஆம் வருடத்திற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிலே சபையின் செயல்நடவடிக்கை சம்பந்தமாக உள்ளக கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

வடமத்திய மாகாண பிரதான செயலாளரின் 2016 மே 11 ஆந் திகதிய என்சீபி/சீஎஸ்/01 ஆம் இலக்க கணக்காய்வு கடிதத்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஒவ்வொரு 02 மாங்களுக்கொரு முறை நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் 2017 ஆம் வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளின் குறைபாடுகள் அடிக்கடி பிரதேச சபையின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டது. கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சொத்துக்கள் குறை உபயோகமாக காணப்படுதல் |
| | | (ii) | சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு இல்லாதிருத்தல். |
| | | (iii) | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (ஆ) | கணக்கீடு | (i) | வருமான சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராமை |
| | | (ii) | பி.ச 12 செலவு பதிவேடு முறையாக முழுமைப்படுத்தப்பட்டிராமை. |
| | | (iii) | வீதவரி பதிவேடு சமப்படுத்தப்பட்டிராமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (ஈ) | கடன்பட்டோர் /கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களுக்கு தீர்வு மேற்கொள்ளப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வாகனங்கள் கட்டுப்பாடு | (i) | எரிபொருள் பரிசோதகை மேற்கொள்ளப்படாமை |
| | | (ii) | தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வாகனங்கள் வருமான பதிவேடு பேணப்பட்டிராமை |
| | | (iii) | லொக் புத்தகத்தின் பதிவுகள் முழுமைத் தன்மை இல்லாதிருத்தல். |